| UG–029 | BTMAO–01 |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION — DECEMBER, 2019.

Third Year

Tamil

நாட்டுப்புறவியல் (வாழ்வியல் தொடர்புப்பாடம்)

Time : Three hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரிரு சொற்களில் விடை தருக.

1. நாட்டுப்புறவியலின் தந்தை என்று நாம் யாரை அழைக்கின்றோம்?

2. நாட்டுப்புறச் செல்வாக்கினை அதிகமாகக் கொண்டு பாடிய ஆழ்வார்கள் யாவர்?

3. நாட்டுப்புறவியல் வெளிப்படுத்தும் மானிடவியல் கூறுகளில் இரண்டனை எழுதுக.

4. நாட்டுப்புறச் சகுனங்கள் இரண்டினை எழுதுக.

5. குழந்தைப் பாடல்களின் இரு வகைகளை எழுதுக.

6. புதிய ஒப்பாரி வகைகளில் இரண்டின் பெயரை எழுதுக.

7. வீரநிலை புராணக் கதை என்பது எதைப்பற்றியது?

8. விடுகதைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.

9. தொல்காப்பியம் பழமொழியை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

10. கைவினைக் கலைகளின் தாயகமாகத் திகழ்வது எது?

11. உலகெங்கும் புகழ்பெற்ற பாய் எது?

12. குடும்ப விழாக்கள் இரண்டினை எழுதுக.

13. முதன் முதலில் மனிதனால் வழிபடப்பட்டவை எவை?

14. தைப்பூசத்திற்கு உண்டான தெய்வது எது?

15. தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் விழாவாக எது விளங்குகிறது?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.

16. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?

17. பிருண்வார்ட் நாட்டுப்புறவியலை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

18. ஏற்றப் பாடலின் அளவு யாது?

19. கதையின் தொடக்கமாகக் எதைக் கூறுவர்?

20. நா.வானமாமலை கதைப்பாடல்களை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

21. கைவினைக் கலைகளை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

22. விழாக்கள் எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகின்றது? அவை யாவை?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. நாட்டுப்புற இலக்கியத்தின் இயல்புகள் குறித்து விளக்குக.

24. கதைப்பாடல்களின் அமைப்பும் தன்மையும் குறித்து எழுதுக.

25. பழமொழிகளுக்கும் விடுகதைகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக.

26. கூத்துக் கலை என்றால் என்ன? அதன் வகைகளை குறித்து எழுதுக.

27. நாட்டுப்புறத் தெய்வங்களின் வளர்ச்சி நிலை குறித்து எழுதுக.

28. கலைகளுக்குப் பெயரிடும் முறையினை விளக்குக.

29. சகுனங்கள் பற்றிய நம்பிக்கைகள் சிலவற்றை விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ஏட்டிலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியங்களின் செல்வாக்கு குறித்து கட்டுரை ஒன்றினை எழுதுக.

31. நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள் பற்றி விவரி.

32. நாட்டுப்புற கதைகளின் வகைகள் குறித்து விளக்கியெழுதுக.

33. நாட்டுப்புற மருத்துவ முறைகள் குறித்துச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

34. நாட்டுப்புறவியல் காட்டும் சமுதாயம் குறித்து விவரிக்க.